**செய்தி வெளியீடு:429** **9.6.2008**

## ஒரகடத்தில் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் 3000 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும் போட்டோ வோல்டாய்க் தொழில்நுட்ப தொழிற்சாலை

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில்தமிழ்நாடு அரசு – மோசர்பேயர் நிறுவனம் இடையேபுரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

மோசர்பேயர் (Moser Baer) என்ற தொழில் நிறுவனம், நினைவாற்றல் சாதனங்கள், யு.பி.எஸ். டிரைவ்ஸ் போன்ற பொருள்களின் தயாரிப்பில் உலகின் புகழ்பெற்ற ஒரு முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனம், போட்டோ வோல்டாய்க் தொழில்நுட்பத் தயாரிப்புகள், நேனோ (Nano) தொழில்நுட்பம், செமி கண்டக்டர்ஸ், ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்குத் தொழில்களுக்கான சாதனங்கள் முதலியவற்றின் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளது.

சென்னைக்கு அருகே ஒரகடம் சிப்காட் உயர்தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் சிலிகான் அடிப்படையிலான போட்டோவோல்டாய்க் பொருள்களையும்,நேனோ தொழில்நுட்பம் அடிப்படையிலான பொருள்களையும், நினைவாற்றல் சாதனங்கள் போன்றவைகளையும் தயாரிக்கும் தொழிற்சாலையை 2000 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட முதலீட்டில் நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இத்தொழிற்சாலை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏறத்தாழ 3000 பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும். ஏற்கனவே, திருவாளர்கள் சிக்னட் சோலார் நிறுவனத்துடன் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் சிலிக்கான் அடிப்படையில் மெல்லிய போட்டோ வோல்டாய்க் பொருள்கள் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை நிறுவுவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 17.3.2008அன்று அரசு கையெழுத்திட்டுள்ளது. அதே வசதியுடன் மோசர்பேயர் தொழிற்சாலையும் அமைவதன் மூலம் சென்னை மின்னணு வன்பொருள் தயாரிப்பு மற்றும் போட்டோ வோல்டாய்க் பொருள்கள் தயாரிப்பில் முக்கிய மையமாக உருவெடுக்கும்.

இத்தொழிற்சாலையை அமைப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசு சார்பில் தொழில்துறைச் செயலாளர் திரு.எம்.எஃப்.பரூக்கி, இ.ஆ.ப., மோசர்பேயர் நிறுவனத்திற்காக, மோசர் பேயர் இந்தியா தொழிற்சாலையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. தீபக்பூரி ஆகியோர் கையொப்பமிட்டனர். மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆ. இராசா, தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில்துறை கூடுதல் செயலாளர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., தொழில் வழிகாட்டுதல் மையத்தின் இயக்குநர் திரு.எம்.வேல்முருகன்,மோசர்பேயர் நிறுவனத்தின் பிரதிநிதிகள் திரு. ஜி. தனஞ்செயன், திரு. ஜி. ராஜேஸ்வரன், திரு. எஸ். ராஜலிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.

.................................................................................................

Issued by : DIPR,Chennai.